பெறுகை அறிவித்தல்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

(கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு)

2026/2027 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்கான விலைமனுக் கோரல்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் / அலுவலகங்களுக்குப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக, பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைபொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு இலக்கம்	:	T/15/2026
விலைமனுவின் பெயர்	:	2026/2027ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்கான விலைமனுக் கோரல்
விலைமனு ஆவணக் கட்டணம்	:	ரூபா 12,500.00 (மீளளிக்கப்படாதது)
விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி மற்றும் நேரம்	:	2026.11.25 அன்று மு.ப. 11.30 இற்கு
விலைமனுக்கு முந்திய சந்திப்பு (Pre-Bid Meeting)	:	2026.11.17 அன்று மு.ப. 10.00 இற்கு – பணிப்பாளர் சபைக் கூட்ட மண்டபம், IDB தலைமை அலுவலகம்
விலைமனுப் பிணை	:	ரூபா 900,000.00 (அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணையொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)
விலைமனுப் பிணை செல்லுபடியாகும் திகதி	:	2027.03.24

01. பாதுகாப்புச் சேவைகள் தேவைப்படும் இடங்கள்

1. தலைமை அலுவலகம் – கட்டுபெத்த
2. தோல் பொருட்கள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் – கட்டுபெத்த
3. சிலோன் பிளாசா – கட்டுபெத்த
4. CERA – கட்டுபெத்த
5. இறப்பர் உற்பத்திப் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் மற்றும் மின்முலாம் பூசும் நிலையம் – பேலியகொடை
6. பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் – பன்னல
7. கைத்தொழில் பேட்டை – ஏக்கல
8. கைத்தொழில் பேட்டை – ஹொரண
9. கைத்தொழில் பேட்டை – பானலுவ, ஹோமாகம
10. கைத்தொழில் பேட்டை – பல்லேகலே
11. கைத்தொழில் பேட்டை – களுதேவல, மாத்தளை
12. கைத்தொழில் பேட்டை – கொட்டகலை
13. கைத்தொழில் பேட்டை – வவுனியா
14. கைத்தொழில் பேட்டை – கலிகமுவ, கேகாலை
15. கைத்தொழில் பேட்டை – அச்சுவேலி
16. கைத்தொழில் பேட்டை – எல்பிட்டிய
17. கைத்தொழில் பேட்டை – பன்னல
18. மாவட்ட அலுவலகம் மற்றும் பொதுச் சேவை நிலையம் – மாத்தறை
19. மாவட்ட அலுவலகம் – மொனராகலை
20. மாவட்ட அலுவலகம் – ஹம்பாந்தோட்டை
21. மாவட்ட அலுவலகம் – பதுளை
22. மாவட்ட அலுவலகம் – காலி மற்றும் சிலோன் பிளாசா
23. தோல் பயிற்சி நிலையம் – இமியங்கொட
24. மாவட்ட அலுவலகம் – அநுராதபுரம்

மேற்குறிப்பிட்ட இடங்களில் சுமார் 80 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணியில் அமர்த்தப்பட வேண்டியிருக்கும்.

02. விலைமனுச் சமர்ப்பிப்பு நடைமுறையானது தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல் நடைமுறையின் (NCB) ஊடாக மேற்கொள்ளப்படும்.

03. ஆர்வமுள்ள மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்கள், மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இலக்கம் 615 இல் அமைந்துள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) வழங்கல் பிரிவின் உதவிப் பணிப்பாளரிடம் (வழங்கல்) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், 2026.11.04 முதல் 2026.11.24 வரை அரசாங்க அலுவலக வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்க முடியும்.

மேலும், இவ்விலைமனு ஆவணங்களை IDB நிறுவனத்தின் இணையதளமான (www.idb.gov.lk) மற்றும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் இணையதளமான (www.industry.gov.lk) ஆகியவற்றிலும் பார்வையிட முடியும் (பார்வையிடுவதற்காக மாத்திரம்).

எனினும், விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது, மேற்குறிப்பிட்ட அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் மாத்திரமே கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 011-2607004 (உதவிப் பணிப்பாளர் – வழங்கல்), 011-2605434 (பணிப்பாளர் – நிர்வாகம்) அல்லது 011-2605326, 7 (IDB பிரதான தொலைபேசி இலக்கம்) ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம்.

04. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகிய இரண்டும்), மொரட்டுவை, கட்டுபெத்தவில் அமைந்துள்ள IDB தலைமை அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் உள்ள உதவிப் பணிப்பாளரிடமிருந்து, 2026.11.04 முதல் 2026.11.24 வரை (அரசாங்க அலுவலக வேலை நாட்களில்) மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை பெற்றுக்கொள்ள முடியும்.

4.1 விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுதாரர் வருகை தரும்போது, நிறுவனத்தின் பெயர், நிறுவனப் பதிவு இலக்கம், விலைமனு இலக்கம் மற்றும் விலைமனுவின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, "தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு (பாரிய அளவானது)" என்ற முகவரியிடப்பட்ட நிறுவனத்தின் கோரிக்கைக் கடிதம் (Company Request Letter) ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.2 விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், மேலே குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இக்கட்டணத்தைப் பணமாக (Cash) மாத்திரமே செலுத்த வேண்டும்.

05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி ஆகியவற்றுடன்), கட்டுபெத்தவில் அமைந்துள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) தலைமை அலுவலகத்தில், தலைவரின் அலுவலகத்திற்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் அல்லது அதற்குள், ''தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு (பாரிய அளவானது), இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலக்கம் 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது விரைதூதர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும். விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதி நேரம் முடிவடைந்தவுடன், விலைமனு திறப்பதில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், IDB தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பணிப்பாளர் சபைக் கூட்ட மண்டபத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனு ஆவணங்கள் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் விலைமனுவின் பெயர் ஆகியன குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள், விலைமனுப் பிணை இல்லாத விலைமனுக்கள் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையிடப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்
திணைக்களப் பெறுகைக் குழு (பாரிய அளவானது)
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
இலக்கம் 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை.
தொலைபேசி / தொலைநகல்: 011-2607004